# இயேசு கிறிஸ்துவின் பிந்தியகாலப் பரிசுத்த வான்களின் திருச்சபையின் விசுவாசக் கோட்பாடுகள்.

1 நாம் நித்திய பிதாவாகிய தேவனையும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவையும், பரிசுத்தாவியானவரையும் விசுவாசிக்கிறோம்.

2 நாம் மனிதர் தங்கள் சொந்தப் பாவங்களுக்காகத் தண்டிக்கப்படுவார்களேயல்லாமல் ஆதாமின் மீறுதலுக்காக அல்ல என்று விசுவாசிக்கிறோம்.

3 நாம் சுவிசேஷத்தின் பிரமாணங்களுக்கும் கட்டளைகளுக்கும் கீழ்படிவதினால் கிறிஸ்துவின் பிராயச்சித்தத்தின் மூலமாக மனிதவர்க்கமெல்லாம் இரட்சிக்கப்படும் என்று விசுவாசிக்கிறோம்.

4 நாம் சுவிசேஷத்தின் முதலாவதான நியமங்களும் கட்டளைகளும் பின் வருபவை என்று விசுவாசிக்கிறோம்; அவையாவன முதலாவது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேல் விசுவாசம் இரண்டாவது மனந்திரும்புதல்; மூன்றாவது பாவமன்னிப்புக்காக முழுக்கல் ஞானஸ்ஞானம் பெற்றுக்கொள்ளுதல்; நான்காவது பரிசுத்தாவியானவரின் வரத்துக்காக கைகளைவைக்குதல்.

5 சுவிசேஷத்தைப் பிரசங்கித்து அதற்குரிய முறைமைகளை நிறைவேற்றுவதற்கு, நாம் தீர்க்கதரிசனத்தினாலும், அதிகாரம் பெற்றவர்கள் கைகளை வைக்குதலினாலும், ஒரு மனிதன் தேவனால் அழைக்கப்பட வேண்டுமென்று விசுவாசிக்கிறோம்.

6 நாம் அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், போதகர்கள், உபதேசிகள், சுவிசேஷகர் ஆகியோரைக் கொண்ட ஆதித் திருச்சபையிலிருந்த அதே நிர்வாக அமைப்பையே விசுவாசிக்கிறோம்.

7 நாம் அந்நிய பாஷைகளைப் பேசும் வரம், தீர்க்கதரிசன முரைக்கும் வரம், வெளிப்படுத்துதலின் வரம், தேவதரிசன வரம், வியாதிகளைக் குணமாக்கும் வரம், அந்நிய பாஷைகளை மொழிபெயர்க்கும் வரம், ஆகிய இவைகளை விசுவாசிக்கிறோம்.

8 நாம் திருத்தமாக மொழிபெயர்க்கப்பட்டுள்ள அளவுக்கு வேதாகமத்தைத் தேவனுடைய வார்த்தையென்று விசுவாசிக்கிறோம், மேலும் நாம் மோமன் புத்தகத்தையும் தேவனுடைய வாாத்தை என்று விசுவாசிக்கிறோம்.

9 நாம் தேவன் வெளிப்படுத்திய எல்லாவற்றையும், தற்போது வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் எல்லாவற்றையும் விசுவாசிக்கிறோம், மேலும் நாம் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்த பெரிதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான பல காரியங்களை இனி மேலும் அவர் வெளிபடுத்துவார் என்று விசுவாசிக்கிறோம்.

10 நாம் சொல்லர்த்தமான வகையில் இஸ்ரவேல் ஒன்று சேர்க்கப்படும் என்றும், பத்துக் கோத்திரங்கள் திரும்பக்கொண்டு வரப்படும் என்றும், சீயோன் (புதிய எருசலேம்) இந்த (அமெரிக்கா) கண்டத்தில் கட்டப்படும் என்றும், கிறிஸ்து தாமே நேரடியாய்ப் பூமியில் ஆட்சி செய்வார் என்றும் பூமியானது புதுப்பிக்கப்பட்டு அதினுடைய பரதீசிய மகிமையை அடையும் என்றும் விசுவாசிக்கிறோம்.

11 நாம் சர்வ வல்ல தேவனை நம்முடைய சொந்த மனச்சாட்சியின் ஏவுதலுக்கேற்க வணங்கும் சிலாக்கியம் பெற்றவர்கள் என்று உரிமை பாராட்டுவதுடன் அவ்விதமே எல்லா மனிதரும் எப்படியாகிலும், எங்கேயாகிலும், எதையானாலும் வணங்கும் சிலாக்கியம் உடையவர்கள் என்பதை, அனுமதிக்கிறோம்.

12 நாம் கீழ்ப்படிவதிலும், கனம்பண்ணுவதிலும், பிரமாணங்களைத் தாங்கி நடப்பதிலும், ராஜாக்களுக்கும், ஜனாதிபதிகளுக்கும், ஆட்சிசெய்வோருக்கும் நீதிபதிகளுக்கும் கீழடங்கியிருக்க வேண்டுமென்று விசுவாசிக்கிறோம்.

13 நாம் நேர்மையுள்ளவர்களாகவும், உண்மையுள்ளவர்களாகவும், கற்புள்ளவர்களாகவும், தாராள சிந்தையுள்ளவர்களாகவும், நற்குணராயும், எல்லா மனிதருக்கும் நன்மை செய்கிறவர்களாகவும், இருக்கவேண்டும் என்று விசுவாசிக்கிறோம். மெய்யாகவே நாம் பவுலின் அறிவுறுத்தலை பின் பற்றுகிறோமென்று சொல்லத்தகும்— நாம் எல்லாக்காரியங்களையும் விசுவாசிக்கிறோம், நாம் எல்லாக் காரியங்களையும் நம்புகிறோம், நாம் அநேக காரியங்களைச் சகித்திருக்கிறோம், மேலும் எல்லாக் காரியங்களையும் சகிக்க வல்லவர்களாவோமென்று நம்பியிருக்கிறோம். நற்குணமுள்ளவைகள் எவைகளோ, அன்புள்ளவைகள் எவைகளோ. நற்கீர்த்தியுள்ளவைகள் எவைகளோ, புகழப்படத் தகுந்தவைகள் எவைகளோ, இவைகளையே நாம் நாடிக் கொண்டிருக்கிறோம்.—

ஜோசப்சிமித்

© 2004 by Intellectual Reserve, Inc. All rights reserved. Printed in the USA. English approval: 3/88. 64370 418

TAMIL
4 02643 70418 3
64370 418